**அசல் வழக்கு எண் : 41/2019**

**நாள்: 07.02.2026**

**வா.சா.1–, பௌசியா க/பெ. அசீம்கான்**

வாதி மற்றும் வாதியின் வழக்கறிஞர் ஆஜர். 3ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1–ன் குறுக்கு விசாரணை**

1. நான் எனது முதல் நிவாரணை வாக்குமூலத்தில் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் எனக்கு ஆதரவாக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளேன். மேற்படி முதல்நிலை தீர்ப்பாணையானது எந்த வழக்கு சொத்திற்காக வழங்கப்பட்டது என்ற விவரத்தை கூற இயலுமா என்றால் அது எனது தாத்தாவின் சொத்தாகும். மேற்படி சொத்தானது எங்கு அமைந்துள்ளது என்றால் பொம்மிடியில் உள்ள மஜீத் தெருவில் அமைந்துள்ளது. மேற்படி சொத்தின் புல எண் என்னவென்றால் 10/2 ஆகும். அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் புல எண்.10/1ல் அமைந்துள்ள நிலத்தின் விஸ்தீரணமானது 70 சென்டாகும். புல எண்.10/2ல் அமைந்துள்ள நிலத்தின் விஸ்தீரணமானது 9–1/2 ஏக்கர் ஆகும்.

2. இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியான நடராஜனை எனக்கு தெரியுமா என்றால் நான் அவரை பார்த்திருக்கிறேன். அவரை எத்தனை வருட காலமாக தெரியும் என்றால் அரூரில் உள்ள மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.89/2009 என்ற வழக்கு நடந்து வந்த காலத்திலிருந்து அவரை எனக்கு தெரியும். அவர் இவ்வழக்கு சொத்தில் அப்போதிருந்தே வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கில் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியான நடராஜன் எங்களது நிலத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்று கூறி அவரை அவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருந்தேனா என்றால் சேர்த்திருந்தேன். மேற்படி வழக்கில் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியான நடராஜன் என்பவருக்கு எதிராக பரிகாரம் கேட்டிருந்தேனா என்றால் இல்லை, குறிப்பிட்டு கேட்கவில்லை.

3. வா.சா.ஆ.1 மற்றும் 2ஆன முதல்நிலை தீர்ப்பைாணை மற்றும் தீர்ப்புரையில் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியான நடராஜன் பெயர் இல்லை என்றால் சரிதான். எனக்கு



கடந்த 2009ம் ஆண்டிலிருந்தே தாவா சொத்தில் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியான நடராஜன் வீடு கட்டி குடியிருந்து வருவதை தெரிந்திருந்தும் கடந்த 11 ஆண்டுகளாக எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காமல் 2019ம் ஆண்டில் இவ்வழக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கானது காலதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் ஆகையால் இவ்வழக்கானது நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

4. நான் இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் எவ்விதமான பிரச்சினையும் செய்யக்கூடாது என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். அதை தவிர்த்து நான் வேறு எந்தவிதமான பரிகாரமும் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதிக்கு எதிராக கேட்கவில்லை என்றால் சரிதான். அரூரில் உள்ள மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் எங்களுக்கு ஆதரவாக முதல்நிலை தீர்ப்பாணை கிடைக்கபெற்றிருந்தாலும் நாளது தேதிவரை அவ்வழக்கு சொத்தில் எனக்கான பங்கு எது என இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்தானது எனது சொத்து என இன்று வரை தீர்ப்பாகவில்லை என்றாலும், நான் தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றாலும், ஆகையால் இவ்வழக்கை தொடர்வதற்கான அருகதை எனக்கு இல்லை என்றாலும் தாவா சொத்தானது எங்களுடையதுதான், நாங்கள்தான் அதன் அனுபவத்தில் உள்ளோம்.

5. எனது வழக்குரையில் நான் கூறியுள்ள இவ்வழக்கிற்கான வழக்கு மூலமானது பொய்யானது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் பிரச்சினை செய்து கட்டிடம் கட்டினார்கள் என அவர்களின் செயல்களை தடுப்பதற்காக 3ம் பிரதிவாதியின் மீது நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. எனது

வழக்குரையிலோ அல்லது எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்திலோ இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியான நடராஜன் எந்தெந்த தேதிகளில் பிரச்சினை செய்தார் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் குறிப்பிட்டு கூறியுள்ளேன். நான் இவ்வழக்கிற்காக தேதிகள் குறிப்பிட்டு கூறியுள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. இவ்வழக்கை தொடர்வதற்கு முன்னர் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியான நடராஜனுக்கு தாவா சொத்தில் அவர் எவ்விதமான பிரச்சினையும் செய்யக்கூடாது



என்றோ அல்லது அவருக்கு வழக்கு சொத்தில் உரிமை இல்லை என்றோ வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினோ என்றால் இல்லை, வாய்மொழியாகத்தான் கூறினோம். நான் கூறுவதுபோல 3ம் பிரதிவாதியானவர் எவ்வித பிரச்சினையும் செய்யாத காரணத்தினால்தான் அறிவிப்பு அளிக்காது இவ்வழக்கை பொய்யான சங்கதிகளுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. மாண்புமிகு அரூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கில் உள்ள பிரதிவாதிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். அவ்வழக்கின் பிரதிவாதிகளை இவ்வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் 3ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கில் கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் இவ்வழக்கை தொடர்வதற்கு எனக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றாலும் ஆகையால் இவ்வழக்கானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் தேவையான நபர்களை தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினாலும் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்கள் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதிக்கு எதிராக பரிகாரங்கள் கோர எனக்கு எவ்விதமான அதிகாரத்தையும் வழங்கவில்லை என்றால் சரியல்ல. மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணையின் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் CRP.No.3799/2018 என்ற மனுவானது நிலுவையில் உள்ளது என்றாலும், அவ்வழக்கில் நான் வழக்கறிஞரை நியமனம் செய்து அவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி CRP.No.3799/2018 அடிப்படையிலும் இவ்வழக்கானது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**சாட்சியானவர் வாதி தரப்பில் மறுவிசாரணை செய்யப்படவில்லை**

SARANYA M

Digitally signed by SARANYA M
Date: 2026.02.07 16:03:57 +0530